**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

**அனுப்புநர்**
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

ந.க. 137/2023/கூதே.5 நாள் : 10.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் – அச்சு மற்றும் மின்னனு ஊடகங்களின் செய்தியாளர்களுக்கு தனியான அடையாள அட்டை வழங்குதல் - தொடர்பாக.

*****

தற்போது தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 15 இதர அரசு துறைகளின் (Government Department) நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் சுமார் 23,149 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் சுமார் 2,22,97,890 / 2,01,76,638 உறுப்பினர் / வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 2,35,062 நிர்வாகக்குழு உறுப்பினர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இவற்றில் 2018-ம் ஆண்டு ஒட்டு மொத்தத் தேர்தல் (Enmasse Election 2018) நடைபெற்று 02.04.2023 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவுறும் 4,221 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மற்றும் இதர வகையில் தேர்தல் நடத்த வேண்டிய 2.772 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆணையம் தேர்தல் நடத்த உத்தேசித்துள்ளது.

அவ்வகையில் முதற்கட்டம் ( I st phase) முதல் நிலையில் ( I st stage) 6,993 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாட்டின் மிகச்சிறிய கிராமங்களிலிருந்து பெரு நகரங்கள் வரை அனைத்து இடங்களிலும் பரவலாக உள்ள இக்கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள விவசாயப் பெருமக்கள், நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், பணியாளர்கள், மகளிர், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் என அனைத்து தரப்பினரும் இத்தேர்தல்களில் உறுப்பினர் / வாக்காளர் என்ற வகையில் பங்கேற்க உள்ளனர்.

இத்தேர்தல்கள் அரசியல் வகையானதல்ல (apolitical) இருப்பினும் தற்போது இக்கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் / செயல்பாடுகளில் மக்கள் அதிக அளவில் ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. அவ்வகையில் அச்சு மற்றும் மின்னனு ஊடகங்கள் (Print, E- Media) இத்தேர்தல் நடவடிக்கைகளில் அதிக அளவு ஆர்வம் காட்டும் வாய்ப்புள்ளது.

எனவே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் பற்றிய சரியான தகவல்கள் முறையான செய்திகள் ஒழுங்கான முறையில் மக்களுக்கு சென்றடைவதும் அவ்வகையில் ஆணையம் தனக்கேற்பட்ட சட்டபூர்வ கட்டளைப்படி கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் வெற்றிகரமாக நடத்திட **மாவட்ட நிர்வாகத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதும் தேவையானதும் என ஆணையம் உறுதியாக கருதுகிறது.**

எனவே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களுக்கு பொறுப்பான மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் தொடர்பாக ஏற்பாடு செய்யும் கூட்டங்கள் மற்றும் செய்தியாளர் சந்திப்பு போன்ற கூட்டுறவு தேர்தல் பற்றிய நிகழ்வுகளில் (Events) தங்களால் ஏற்பளிக்கப்பட்ட (accredited) அச்சு மற்றும் மின்னனு ஊடகங்களின் செய்தியாளர்கள் மட்டிலுமே அனுமதிக்கப்படும் வகையில் அவர்களுக்கென தனியான இணைப்பில் கண்டுள்ள மாதிரி அடையாள அட்டை (Model Media Person Pass) வடிவத்தில் மாவட்ட தகவல் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக வழங்கிட தங்களை ஆணையம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

ஓம்/-
ஆணையர்

ஆணையருக்காக

13/02/23

இணைப்பு : Media Person Pass – மாதிரி வடிவம்.

நகல் :

1. இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்புத்துறை சென்னை- 600 009.
   - அனைத்து மாவட்ட தகவல் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கிட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்.
3. இதர செயற்பதிவாளர்கள்/ மாநில தேர்தல் அலுவலர்கள்.
4. அனைத்து மாவட்ட தகவல் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
5. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
6. கூதே. பிரிவு – 3
7. இருப்புக் கோப்பு – 2023.

இணைப்பு

(ந.க.137/2023/கூ.தே.5)

(Model Format for Media Person Pass)

**TAMIL NADU CO-OPERATIVE SOCIETIES ELECTION 2023**

**MEDIA PERSON PASS**

PHOTO

| | |
|---|---|
| ACCREDITATION No : | |
| NAME : | |
| NAME OF THE MEDIA : | |
| MOBILE No : | |
| VALID UPTO : | 25.03.2023 |

HOLDER'S SIGNATURE

(DISTRICT PUBLIC RELATIONS OFFICER)

(Seal with Signature)